## தீவிரப் பிரச்சாரத்தில் ஈடுபட்டு

# கழகப் பணியாற்றி 7வது முறையாக ஆட்சி அமைப்போம்!

### தஞ்சை மாவட்ட – பொதுக்குழு உறுப்பினர் துரை ஜெயக்குமார் இல்ல மணவிழாவில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!





தஞ்சாவூர், பிப்.8-

**தஞ்சாவூர் மாவட்டம், குருங்குளம் அற்புதபுரத்தைச் சேர்ந்த கழகப் பொதுக்குழு உறுப்பினர் துரை ஜெயக்குமார் அவர்களின் மகள் பூஜா - கோகுலகிருஷ்ணன் ஆகியோரின் திருமணத்தை, தஞ்சாவூரில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று முன்தினம் நடத்தி வைத்து வாழ்த்திப் பேசினார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய வாழ்த்துரையின் விவரம் வருமாறு:**

இன்றைக்கு இல்வாழ்க்கையில் அடி எடுத்து வைக்கக்கூடிய, கழகத்தின் பொதுக்குழு உறுப்பினர் அண்ணன் ஜெயக்குமார் - விஜயலட்சுமி இணையரின் அன்பு மகள் பூஜா மற்றும் தஞ்சை அம்மாபேட்டையைச் சேர்ந்த அண்ணன் நடராஜமணி - அமரஜோதி இணையரின் மகன் கோகுலகிருஷ்ணன் ஆகியோருக்கு என்னுடைய வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

#### உற்சாகமான வரவேற்பு

இந்தத் திருமண நிகழ்ச்சியிலும் சரி, வருகின்ற வழியெங்கும் சரி, மிகச் சிறந்த ஓர் உற்சாகமான வரவேற்பைக் கொடுத்த கழக நிர்வாகிகளுக்கும், கலைஞரின் உடன்பிறப்புகளுக்கும், பொதுமக்களுக்கும் முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திருமண நிகழ்ச்சியை அண்ணன் ஜெயக்குமாரின் இல்லத் திருமணம் என்று சொல்வதைவிட, கழகக் குடும்பத்தின் ஒரு திருவிழா என்று சொன்னால் அது மிகையாகாது. அந்த அளவுக்கு மிகச் சிறப்பாக, எழுச்சியோடு, மகிழ்ச்சியோடு இந்தத் திருமண நிகழ்ச்சியை அவர் ஏற்பாடு செய்திருக்கிறார்.

அண்ணன் ஜெயக்குமார் அவர்களைப் பற்றி இங்கே சொல்ல வேண்டுமென்றால், அவர் கழகத்தின் ஒரு தீவிரமான செயல்பாட்டாளர், கழகத்தின் தீவிர செயல் வீரர். கலைஞர் மற்றும் தலைவர் ஆகியோரின் அன்பு உடன்பிறப்பு. தன்னுடைய இளமைக் காலத்திலிருந்தே இந்த இயக்கத்துக்காகத் தன்னுடைய உழைப்பைக் கொடுத்து வருபவர். கழகத்துக்காக உழைத்து, படிப்படியாக உயர்ந்து, இன்றைக்கு பொதுக்குழு உறுப்பினராகத் திகழ்கிறார் அண்ணன் ஜெயக்குமார் அவர்கள். கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்துகொண்டு, மக்கள் போராட்டங்களுக்காகப் பலமுறை சிறைக்குச் சென்றவர் அண்ணன் திரு.ஜெயக்குமார் அவர்கள்.

#### சட்டப்போராட்டம் வெற்றி

முந்தைய பத்தாண்டுகால அடிமை அ.தி.மு.க ஆட்சியில், அண்ணன் அவர்கள் களப்போராட்டத்தை மட்டுமல்லாது, சட்டப்போராட்டத்தையும் நடத்தி அதிலும் வெற்றி பெற்றவர்தான், அண்ணன் ஜெயக்குமார் அவர்கள்.

இப்போது எதிர்க்கட்சித் தலைவர்எடப்பாடி பழனிசாமி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, நெடுஞ்சாலைத் துறையில் 'பேக்கேஜ் டெண்டர்' திட்டத்தைக் கொண்டு வந்தார். அதன் மூலமாக ஒட்டுமொத்த டெண்டரையும் எடப்பாடி பழனிசாமி அவர்கள், அவருடைய சொந்தச் சம்பந்திக்குக் கொடுக்க முயற்சி எடுத்தார். அதை எதிர்த்து, அண்ணன் ஜெயக்குமார் அவர்கள்தான் முதன்முறையாக நீதிமன்றத்துக்குச் சென்றார். நீதிமன்றத்துக்குச் சென்றது மட்டுமல்லாமல், அங்கு வெற்றி பெற்று எடப்பாடி பழனிசாமியின் முயற்சியைத் தகர்த்தெறிந்தவர் அண்ணன்ஜெயக்குமார் அவர்கள். அதற்காக அண்ணன் ஜெயக்குமார் அவர்களைப் பாராட்டி நம்முடைய கழகத் தலைவர் அவர்கள் முரசொலியில் ஒரு கட்டுரையை எழுதினார்கள்.

#### மிகுந்த மகிழ்ச்சி

அப்படிப்பட்ட பெருமை வாய்ந்த அண்ணனின் இல்லத் திருமணத்தை நடத்தி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன், பெருமை அடைகின்றேன். கூடுதல் மகிழ்ச்சி, கூடுதல் பெருமை என்னவென்றால், இன்றைக்கு இந்தத் திருமண விழா ஒரு சுயமரியாதை திருமண விழாவாக இங்கே நடைபெற்று வருகிறது. இங்கே இந்த அரங்கத்தில் ஆண்களுக்கு நிகராகப் பெண்கள், இன்னும் சொல்லப்போனால் ஆண்களைவிட அதிகமாகப் பெண்கள் வந்திருக்கிறீர்கள். இதைப் பார்க்கும்பொழுது மிகுந்த மகிழ்ச்சியாக உள்ளது.

ஒருகாலத்தில் பெண்கள் வீட்டைவிட்டு வெளியே வர முடியாத ஒரு சூழ்நிலை இருந்தது. ஆனால், இன்றைக்குப் பார்த்தீர்கள் என்றால், படிப்பதற்கும் வேலைக்குச் செல்வதற்கும் ஆண்களைவிடப் பெண்கள்தான் அதிகமாக வீட்டைவிட்டு வெளியே செல்கிறார்கள். பெண்களுடைய உலகமே இன்றைக்கு மாறியிருக்கிறது, அவர்கள் சுதந்திரமாகச் சென்று வருகிறார்கள். இந்த மாற்றத்தையெல்லாம் செய்து காட்டிய இயக்கம் நம்முடைய திராவிட இயக்கம்.

இன்னும் பெருமையாகச் சொல்ல வேண்டும் என்றால், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பின்பு ஒவ்வொரு திட்டத்தையும் மகளிருக்காகப் பார்த்துப் பார்த்துச் செய்து வருகிறார். இன்றைக்குப் பல மாநிலங்கள் நம்முடைய தமிழ்நாட்டை ``மகளிர் மாநிலம்' என்றே பெருமையாக அழைக்கின்றன. மகளிருக்காக நம்முடைய முதலமைச்சர் ஒவ்வொரு திட்டத்தையும் பார்த்துப் பார்த்து செயல்படுத்துகிறார்.

#### காலை உணவுத் திட்டம்

2021-இல் ஆட்சிப் பொறுப்பேற்ற பொழுது, முதலமைச்சராகப் பொறுப்பேற்று அவர் இட்ட முதல் கையெழுத்து மகளிருக்கானது. அதுவே, மகளிருக்கான விடியல் பயணத் திட்டம்.

காலையில் எழுந்து வேலைக்குச் செல்லும் பெற்றோர்களுக்கு, குறிப்பாக, மகளிருக்குக் குழந்தைகளுக்குச் சமைப்பதற்கென்று நேரமில்லை. எனவே, குழந்தைகள் வெறும் வயிற்றுடன் பள்ளிக்கூடத்துக்குச் செல்லக் கூடாது என்று பெண்களின் சுமையைக் குறைப்பதற்காக நம்முடைய முதலமைச்சர் அறிமுகப்படுத்தியதுதான் முதலமைச்சர் காலை உணவுத் திட்டம். இன்றைக்கு ஒவ்வொரு நாளும் கிட்டத்தட்ட 22 லட்சம் குழந்தைகள் இத்திட்டத்தின் மூலம் பயன்பெற்று வருகிறார்கள்.

பெண்கள் பள்ளிக்கூடத்துக்கு வந்தால் மட்டும் போதாது, கல்லூரிக்குச் சென்று மேற்படிப்புப் படிக்க வேண்டும் என்பதற்காக, அரசுப் பள்ளியில் பயின்றவர்கள் எந்தக் கல்லூரியில் சேர்ந்தாலும், அவர்களுடைய படிப்புக்காகக் கல்வி ஊக்கத் தொகையாக மாதம் 1,000 ரூபாய் நம் முதலமைச்சர் அவர்கள் வழங்குகிறார்கள்.

இதற்கெல்லாம் மகுடம் வைத்ததுதான் உங்களுடைய முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கக்கூடிய கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம். இன்றைக்கு ஒவ்வொரு மாதமும் ஒரு கோடியே 30 லட்சம் மகளிருக்கு மகளிர் உரிமைத் தொகையை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வழங்கி வருகிறார்கள்.

#### இரட்டை இலக்க வளர்ச்சி

இப்படிப் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருவதால்தான், இன்றைக்கு இந்தியாவிலேயே வளர்கின்ற மாநிலமாக நம்முடைய தமிழ்நாடு 11.19 சதவிகித வளர்ச்சியுடன், இரட்டை இலக்க வளர்ச்சியோடு முதலிடத்தில் திகழ்ந்து கொண்டிருக்கிறது. இதையெல்லாம் பார்த்துப் பொறுத்துக்கொள்ள முடியாத ஒன்றிய பா.ஜ.க அரசு, இன்றைக்குப் பல்வேறு வகைகளில் நம்முடைய தமிழ்நாட்டுக்கும் நம்முடைய அரசுக்கும் பல தொல்லைகளைக் கொடுத்து வருகிறது. நிதி உரிமையை மறுக்கிறார்கள். மொழி உரிமையைப் பறிக்கிறார்கள். சமீபத்தில் ஒன்றிய அரசு பட்ஜெட் தாக்கல் செய்தது. தமிழ்நாட்டுக்கு ஒரு திட்டத்தைக்கூட ஒன்றிய பா.ஜ.க அரசு அறிவிக்கவில்லை. ஆனால், இதையெல்லாம் கண்டிக்க வேண்டிய எதிர்க்கட்சித் தலைவர் அமைதியாக இருக்கிறார். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கண்டித்துவிட்டார். ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி இந்தப் பட்ஜெட்டை வரவேற்று இருக்கிறார்.

#### புதிய அடிமைகள்

தமிழ்நாட்டுக்கு ஒரு திட்டத்தைக்கூட வழங்காத ஒன்றிய அரசின் பட்ஜெட்டை அவர் வரவேற்றுள்ளார். அதுமட்டுமல்லாமல், இதுவரை நாம் அவரை `அடிமை அ.தி.மு.க', `அடிமை எடப்பாடி பழனிசாமி' என்று கேலி செய்து பேசிக்கொண்டிருந்தோம். இப்பொழுது அவரே அதைப் பெருமையாகப் பேசத் தொடங்கிவிட்டார். ``ஆமாம், நான் அடிமைதான், நான் பா.ஜ.க-வின் அடிமைதான், நான் அமித்ஷாவின் அடிமைதான், மோடியின் அடிமைதான்'' என்று இன்றைக்கு எடப்பாடி பழனிசாமி ஒப்புக்கொள்ளத் தொடங்கிவிட்டார்.

அதனால் என்ன தவறு என்று அவர் கேட்கிறார். அவருடைய கேள்விகளுக்கெல்லாம் வரும் சட்டமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டு மக்கள் நிச்சயம் ஒரு தெளிவான, அழுத்தமான பதிலைக் கொடுப்பார்கள். பழைய அடிமைகள் போதாது என்று இன்றைக்குப் புதிய அடிமைகளையும் தேர்தல் களத்துக்கு அழைத்து வருகிறார்கள். ஆனால், யார் எப்படி வந்தாலும், வரும் சட்டமன்றத் தேர்தலில் நிச்சயம் வெற்றி பெறப்போவது நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம்தான், நம்முடைய உதயசூரியன் சின்னம்தான். வெற்றி பெற்று மீண்டும் நம்முடைய கழகத் தலைவர் அவர்கள்தான் முதலமைச்சராக அமரப் போகிறார்.

ஜெயிக்கப்போவது நிச்சயம் நம்முடைய கழக அணிதான். அந்த வெற்றியை நோக்கி அடுத்த இரண்டு மாத காலம் நாம் இன்னும் தீவிரமாகப் பிரச்சாரத்தில் ஈடுபட வேண்டும், கழகப்பணி ஆற்ற வேண்டும். ஏழாவது முறையாக ஆட்சி அமைக்க வேண்டும், இரண்டாவது முறையாக நம் தலைவர் முதலமைச்சராக வேண்டும் என்று, அயராது உழைப்போம் என்று, இந்த நேரத்தில் உங்களையெல்லாம் கேட்டுக்கொள்கிறேன்.

#### சிறு கோரிக்கை

மணமக்களுக்கு ஒரு சிறு கோரிக்கை. நீங்கள் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு வாழ வேண்டும். சுயமரியாதையோடும் பகுத்தறிவோடும் எதற்கெல்லாம் விட்டுக்கொடுக்க வேண்டுமோ அதற்கெல்லாம் விட்டுக்கொடுத்து, உங்களுடைய உரிமைகளை விட்டுக்கொடுக்காமல் நிச்சயம் உங்களுடைய வாழ்க்கையை நீங்கள் அமைத்துக்கொள்ள வேண்டும்.

முக்கியமாக, உங்களுக்குப் பிறக்கக்கூடிய குழந்தைக்கு அது ஆண் குழந்தையாக இருந்தாலும் சரி, பெண் குழந்தையாக இருந்தாலும் சரி, அக்குழந்தைக்கு ஓர் அழகான தமிழ்ப் பெயரைச் சூட்ட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, உங்கள் அனைவரின் சார்பாக மணமக்களை வாழ்க, வாழ்க, வாழ்க என வாழ்த்தி, வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்திப் பேசினார்.

#### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் கோவி.செழியன், அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மெய்யநாதன், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, தஞ்சை மத்திய மாவட்டக் கழகச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான துரை சந்திரசேகர், காங்கிரஸ் செயற்குழு உறுப்பினர் கிருஷ்ணசாமி வாண்டையார், மற்றும் மாவட்டக் கழகச் செயலாளர்கள் பூண்டி கலைவாணன், செல்லபாண்டியன், சாக்கோட்டை அன்பழகன், முன்னாள் அமைச்சர் வைத்திலிங்கம், தலைமை நிலையச் செயலாளர் பூச்சி முருகன், டெல்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், கழக இளைஞர் அணி மாநில துணைச் செயலாளரும் தாட்கோ தலைவருமான இளையராஜா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ்.கல்யாணசுந்தரம், ச. முரசொலி, சட்டமன்ற உறுப்பினர்கள் டி.கே.ஜி.நீலமேகம், அசோக்குமார், அண்ணாதுரை, முத்துராஜா, மாநகரச் செயலாளரும் மேயருமான சண்.ராமநாதன், ஜித்து, மருத்துவர் அஞ்சுகம் பூபதி, சூர்யா வெற்றிகொண்டான், கம்பன், செல்வம், களிமேடு செல்வம், எம்.ராமச்சந்திரன், மகேஷ் கிருஷ்ணசாமி, அருளானந்தசாமி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் முகில்வேந்தன் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்து கொண்டனர்.

---

### தொடர்வண்டி வழித்தடங்களில், தொடர்ந்து

## வன விலங்குகள் பலியாவதைத் தடுக்க ஒன்றிய அரசின் நடிவடிக்கைகள் யாவை?

### மக்களவையில் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் கேள்வி!



புதுடெல்லி, பிப்.8-

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் 04.2.2026 அன்று மக்களவையில், தொடர்வண்டி வழித்தடங்களில் யானை போன்ற வனவிலங்குகள் தொடர்ந்து பலியாவதை தடுக்க ஒன்றிய அரசின் நடவடிக்கைகள் என்னென்ன? என்றும், கடந்த ஐந்தாண்டுகளில் இதுவரை எவ்வளவு வன விலங்குகள் பலியாகியுள்ளன? என்றும், இதற்கான தடுப்பு நடவடிக்கைகளை ஒன்றிய அரசு மேற்கொள்ளுமா? என்றும் இதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்றும் ஒன்றிய அரசின் இரயில்வேத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அவர்களிடம் விரிவான கேள்வி எழுப்பினார்.

ஒன்றிய அரசின் இரயில்வேத் துறை அமைச்சர் அவர்கள் அளித்த பதில் வருமாறு:

இந்திய இரயில்வேத்; துறையும், சுற்றுச்சூழல் மற்றும் காடுகள் துறையும் இணைந்து செயல்பட்டு, யானைகள் பலியாவதையும், வன விலங்குகள் உயிரிழப்பைத் தடுக்கவும், தேவையான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன என்றும், செயற்கை நுண்ணறிவு முறையினை பயன்படுத்தி யானகைள் வருவதை முன் கூட்டியே கண்டறிய ஒலி உணர்வுக் கருவிகள் தொடர் வண்டிகளில் பொருத்தப்பட்டுள்ளன என்றும், தொடர் வண்டி ஓட்டுநர்கள், தொடர் வண்டி நிலைய அதிகாரிகள் மற்றும் கட்டுபாட்டு அறை ஆகிய மூன்று இடங்களிலும் யானைகளின் நடமாட்டத்தை முன் கூட்டியே அறிய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும், வடகிழக்கு செயற்கை நுண்ணறிவு உதவியுடன் இயங்கும் ஊடுருவல் கண்டறியும் அமைப்பு, தொடர் வண்டித்துறையில் 1300 கிலோ மீட்டர்கள் அளவிற்கு செயல்பட்டு வருகின்றது என்று அமைச்சர் மக்களவையில் தெரிவித்தார்.

தொடர்வண்டி துறை அதிகாரிகளும், சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அதிகாரிகளும் இணைந்து செயல்பட்டு வேகத்தடைகள் அமைக்கவும், ஓட்டுநர்களுக்குகான பயிற்சிகளும் அளிக்கப்பட்டு வருகின்றன என்றும், யானைகளுக்கான வழித்தடங்கள் தேவையான இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன என்றும் ஒவ்வொரு ஆண்டும் 16 யானை சார்ந்த விபத்துகள் இதுவரை கண்டறியப்பட்டுள்ளன என்றும், வேலிகள் அமைப்பது, சூரிய ஒளியுடன் இயங்கும் விளக்குகளை அமைத்தல், நிலைய அதிகாரிகளுக்கு பயிற்சி அளித்தல், ஒலி எழுப்பும் கருவிகள், ஒளிப் படக் கருவிகள் அமைத்தல் போன்ற பல்வேறு முயற்சிகளை அரசு எடுத்து வருகின்றது என ஒன்றிய அரசின் மாண்புமிகு இரயில்வேத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அவர்கள் மக்களவையில் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதிலளித்தார்.

---

### மாற்றுத்திறனாளிகள் மற்றும் திருநங்கைகளுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சிக்கென

## ஒன்றிய அரசிடம் ஏதேனும் திட்டங்கள் உள்ளதா?

### மாநிலங்களவையில் எஸ். ஆர். சிவலிங்கம் கேள்வி!



புதுடெல்லி,பிப்.8-

திராவிட முன்னேற்றக் கழக, மேலவை உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம் அவர்கள் 04 ஜனவரி 2026 அன்று மாநிலங்களவையில், மாற்றுத் திறனாளிகள் மற்றும் திருநங்கைகள் ஆகியோருக்குமான வளர்ச்சி குறித்து ஒன்றிய அரசிடம் ஏதேனும் திட்டங்கள் உள்ளதா? என்றும் தமிழக அரசின் வீட்டுக் காவல் படையில் திருநங்கைகள் வேலை வாய்ப்பினை பெறுவது குறித்து ஒன்றிய அரசு அறிந்துள்ளதா? என்றும், இவர்களுக்குகான திறன் மேம்பாடு பயிற்சிக்கென தேவையான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா? என்றும் விளிம்பு நிலையிலுள்ள அனைவருக்குமான வளர்ச்சியை அரசு உறுதிப் படுத்துமா? என்று ஒன்றிய அரசின் சமூக நிதி மற்றும் அதிகாரமளித்தல் துறையின் இணையமைச்சர் பி. எல். வர்மா அவர்களிடம் விரிவான கேள்வி எழுப்பினார்.

ஒன்றிய அரசின் சமூக நிதி மற்றும் அதிகாரமளித்தல் துறையின் இணையமைச்சர் அவர்கள் அளித்தபதில் பின் வருமாறு:

திருநங்கைகளுக்கான இணைய தளம் ஏற்படுத்தப்பட்டு அதன் மூலம் திருநங்கைகள் சான்றிதழ்கள் வழங்கவும், அடையாள அட்டைகளை வழங்கவும், அவர்கள் கணிணி மூலம் அனைத்து வசதிகளை பெற ஏற்பாட்டு செய்யப்பட்டுள்ளது என்றும், இதுவரையில் 31559 சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளது என்றும், 17 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில், 23 கரிமா இல்லங்கள் திருநங்கை களுக்கென ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும், 15 மாநிலங்களில் கடந்த இரண்டு ஆண்டுகளில் ரூபாய் நான்கு கோடியே எழுபத்தி ஏழு இலட்சம் அளவிற்கு 598 திருநங்கைகளுக்கு நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது என்றும், தமிழ்நாட்டில் மட்டும் 23 திருநங்கைகளுக்கு ரூபாய் ஒன்பது இலட்சம், ஏழுபத்தி ஆறாயிரம் அளவிற்கு நிதியுதவியை ஒன்றிய அரசின் சமூக நிதி மற்றும் அதிகாரமளித்தல் துறை வழங்கியுள்ளது என்று இணையமைச்சர் மாநிலங்களவையில் தெரிவித்தார்.

மேலும், 906 திருநங்கைகளுக்கு கடந்த நிதியாண்டில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது என்றும், 58 திருநங்கைகளுக்கு, கடந்த இரண்டு ஆண்டுகளில் ரூபாய் எட்டு கோடிகள் செலவின் கீழ் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது என்றும், கடந்த இரண்டு ஆண்டுகளில் 270 கோடிகள் செலவில் 65487 மாற்றுத்திறனாளிகளுக்கு பல்வேறு திட்டங்களுக்கென செலவிடப்பட்டுள்ளது என்றும், கடந்த இரண்டு நிதியாண்டுகளில் கல்வி உதவித் தொகையாக ருபாய் 221 கோடிகள் அளவிற்கு 52418 மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் ஸ்மைல், கரிமா இல்லம், அடையாள அட்டை வழங்கதல், கடன் உதவி, பணிக்கொடை வழங்குதல், தீன்தயாள் மறுவாழ்வு திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை திருநங்கைகளுக்காகவும் மாற்றுத் திறனாளி களுக்காகவும் நிறைவேற்றி உள்ளது என்று ஒன்றிய அரசின் நிதித் துறை இணையமைச்சர் திருபங்கஜ் சௌத்ரிஅவர்கள் மாநிலங்களவையில் திமுக மேலவை உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதிலை அளித்துள்ளார்.